<u>முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>

**<u>OS.No. 17 /2022</u>**

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை பி.**வா.சா.1** வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. நிர்மலா, கிரேடு 1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | கிராமம் | |
| த/பெ | | வட்டம் | |
| வயது | | தொழில் | |

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

IA.14/2026, 15/2026, 16/2026 ஆகிய மனுக்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் சாட்சி ஆவணங்களை குறியீடு செய்வதற்காக அழைக்கப்பட்டார். தாவா B அட்டவணை சொத்தின் 1வது அயிட்டம் சர்வே எண்.36/1 விஸ்தீரணம் 28 ஏர்ஸ் சொத்தை வேலாயுதம் என்பவர் 22.10.2008 அன்று எனக்கு கிரையம் எழுதி கொடுத்திருக்கிறார். அந்த கிரைய பத்திர நகலை **பி.வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்கிறேன். அந்த சொத்தை நான் 10.07.2013 ல் கந்தசாமி மகன் நீலமேகம் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன். அந்த கிரைய பத்திர நகலை **பி.வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்கிறேன். தற்போது அந்த சொத்து நீலமேகத்தின் அனுபவத்தில் தான் உள்ளது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் என் மனைவியின் நகையை விற்று தான் அந்த சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல, என் மனைவிக்கு நகையே அவர்கள் வீட்டில் போடவில்லை. நான் தவறாக சொல்லுகிறேன் என்றாலும், கூட்டு குடும்ப நன்மைக்காக தான் அந்த கிரையம் 2008 ம் ஆண்டில் பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் நீலமேகத்திடம் ஏற்படுத்திய கிரையம் வாதிகளின் பாக உரிமையை பாதிக்காது

என்றால் சரியல்ல. எனக்கும் என் மனைவி மணிமேகலைக்கும் அரியலூர் குடும்ப நல நீதிமன்றத்தில் FCMC.No.12/2022 வழக்கு நடைபெற்று அது 04.09.2023 அன்று உத்தரவாகி இருக்கிறது என்றால் சரிதான். அந்த நீதிமன்ற நகல் தான் தற்போது என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த நகல் **வா.த.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (அது நீதிமன்ற தீர்ப்பு என்று ஒப்புக்கொண்டாலும் Xerox ஆவணம் என்று 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்.)

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.